<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS** 05/2009

2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 01.04.2024

Pw1 ( டி ஏ சுப்பிரமணியம் )

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்தில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் உள்ளன என்றால் 3 அயிட்ட சொத்துக்கள் உள்ளன. தாவா 2 ம் அயிட்ட சொத்து இந்த வழக்கு தாக்கல் செய்யும் முன்பே 3 ம் நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி தனது எதிருரையில் தாவா 2 ம் அயிட்ட சொத்துக்கள் ஏற்கனவே விற்கப்பட்டுவிட்டது என்று கூறியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1 ம் பிரதிவாதி என்ன எதிர்வாதம் செய்துள்ளார் என்று நான் படித்து பார்க்கவில்லையா என்றால் இல்லை. 3,4 பிரதிவாதிகள் நிதி நிறுவனம் நடத்தி வருகிறார்களா என்றால் தெரியாது. 3,4 பிரதிவாதிகளுக்கு இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் விவரம் நன்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதி நேரடியாக 3,4 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுக்கவில்லை என்றால் ஆமாம், பத்திரத்தை பார்த்து பவர் ஏஜென்ட் கிரயம் கொடுத்துள்ளதாக தெரிந்து கொண்டேன். அந்த பவர் ஏஜென்ட் யார் என்றால் எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதி எந்த் சூழ்நிலையில் எதற்காக யார் பெயரில் பவர் எழுதி கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். பவர் ஏஜெட் 3,4 பிரதிவாதிகளுக்கு எழுதி தந்த கிரயம் பற்றி 1 ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3,4 பிரதிவாதிகள் பெயரில உள்ள கிரயம் செல்லாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, அதை நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும். 3,4 பிரதிவாதிகளின் கிரயம் நடைமுறைக்கு வரவில்லை என்றும், செல்லாது என்றும் நான் வழக்காடுகிறேனா என்றால் எனக்கு பின்னால் கிரயம் பெற்றதால் அது செல்லாது என்று சொல்லியுள்ளேன். 3 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதி பெயருக்கு வழக்கு நிலுவையில் இருந்தபோது எழுதி கொடுத்த கிரயமும் செல்லாது என்றால் ஆமாம், அதையும் நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும். 3,4 பிரதிவாதிகள் தங்கள் கிரயத்தின் அடிப்படையில் சொத்தின் சுவாதீனம் எடுத்துக்

கொள்ளவில்லை என்றால் சரி. 3,4 பிரதிவாதிகள் நல்லெண்ண கிரய தாரர்கள் அல்ல என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 3,4 பிரதிவாதிகளால் தாவா சொத்தில் எந்த கட்டுமானமும் கட்டப்படவில்லை என்றும் தாவா சொத்தில் உள்ள கட்டுமானம் ஏற்கனவே இருந்தது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து 3 அயிட்டங்களிலும் 1 ம் பிரதிவாதி மற்றும் அவரின் குடும்பத்தார் அனுபவத்தில் உள்ளது என்றால் சரி. 3,4 பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதிக்கு தெரியாமல் பட்டா மாறுதல் செய்து கொண்டுள்ளார்கள் என்ாறல் தெரியாது, 1 ம் பிரதிாவாதியின் பூர்வீக சொத்துக்கள் தான் தாவா சொத்துக்கள் என்றால் சரி. 3,4 பிரதிவாதிகளுக்கு இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் அது எனக்கு தெரியாது. 3,4 பிரதிவாதிகள் பெயருக்கு பத்திரம் மறுபயன் இன்றி எழுதுப்பட்டுள்ளதா அல்லது என்ன காரணத்திற்காக எழுதப்பட்டள்ளது என்றால் எனக்கு தெரியாது. 3,4 பிரதிவாதிகள், நானும் 1 ம் பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக கூட்டாக செயல்படுகிறோம் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishnapriya,1.4.24
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS